# உயிர் எழுத்து

- உயிரெழுத்துகள் 12 உள்ளன.
- அவை அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ
- இவை பிற எழுத்துகளின் துணையின்றி ஒலிக்கக்கூடியவை
- உயிரெழுத்துகள் குறில், நெடில் என இரு வகைப்படும்

குறில் எழுத்துகள்/குற்றெழுத்து (5) - குறுகிய ஓசை உடையவை

(அ, இ, உ, எ, ஒ)

நெடில் எழுத்துகள்/நெட்டெழுத்து (7) - நெடிய ஓசை உடையவை

(ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ)

Kalviulagu
TAMIL EDUCATION WEB

# உயிர்மெய் எழுத்து

- உயிர்மெய் எழுத்துகள் 216 உள்ளன.
- உயிர் எழுத்தும் மெய் எழுத்தும் சேர்வதால் பிறக்கின்ற எழுத்துகளே உயிர்மெய் எழுத்துகளாகும்.

எ.கா : க் + அ = க
(மெய்) (உயிர்) (உயிர்மெய் எழுத்து)

- உயிர்மெய் எழுத்துகளின் வகைகள்.

வல்லின உயிர்மெய் எழுத்துகள் : 72 எழுத்துகள்
மெல்லின உயிர்மெய் எழுத்துகள் : 72 எழுத்துகள் 216 எழுத்துகள்
இடையின உயிர்மெய் எழுத்துகள் : 72 எழுத்துகள்

- உயிர்மெய் குறில் : 5 X 18 = 90 எழுத்துகள்

எ.கா : க் + உ = கு
த் + ஒ = தொ

- உயிர்மெய் நெடில் : 7 X 18 = 126 எழுத்துகள்

எ.கா : க் + ஊ = கூ
த் + ஓ = தோ

Kalviulagu
TAMIL EDUCATION WEB

# ஆய்த எழுத்து

- மூன்று புள்ளிகளைக் கொண்ட எழுத்து வடிவம் ( ஃ )

எ. கா. எஃகு, அஃது

**தமிழ் நெடுங்கணக்கு**

| | |
|---|---|
| உயிர் எழுத்து | 12 |
| மெய் எழுத்து | 18 |
| உயிர்மெய் எழுத்து | 216 |
| ஆய்த எழுத்து | 1 |
| மொத்தம் | 247 |

Kalviulagu
TAMIIL EDUCATION WEB

# கிரந்த எழுத்துகள்

- சமஸ்கிருத ஒலிகளை எழுதுவதற்குத் தமிழில் உருவாக்கப்பட்ட எழுத்துகள் கிரந்த எழுத்துகள் எனப்படும்.

ஸ, ஷ, ஹ, ஜ, ஸ்ரீ, க்ஷ ஆகிய ஆறும் கிரந்த எழுத்துகள்.

எ.கா : ஸர்ப்பம், புஷ்பம், ஹஜி, ஜமாலுடின், பத்து காஜா, டத்தோ ஸ்ரீ, பக்ஷி.

Kalviulagu

TAMIIL EDUCATION WEB

# இன எழுத்துகள்

- இன எழுத்துகள் பிறப்பியல் அடிப்படையில் ஒரே இடத்திலிருந்து பிறக்கும் ஒலிகளாகும்.

- வல்லினத்திற்கு மெல்லினம் இனமாகும்

| | | |
|---|---|---|
| க் - ங் | = | தங்கம் |
| ச் - ஞ் | = | இஞ்சி |
| ட் - ண் | = | வண்டி |
| த் - ந் | = | தந்தம் |
| ப் - ம் | = | அம்பு |
| ற் - ன் | = | தென்றல் |

Kalviulagu
TAMIL EDUCATION WEB

# சுட்டெழுத்து

- ஒன்றனைச் சுட்டிக்காட்ட வரும் எழுத்துக்குச் சுட்டெழுத்து என்று பெயர். இது மொழிக்கு முதலிலே நின்று ஒரு பொருளைச் சுட்டிக்காட்டும்.

- சுட்டெழுத்துகள் மூன்று (அ,இ,உ)

(1) அ - சேய்மைச்சுட்டு (தொலைவு) : அங்கு, அவன், அது

(2) இ - அண்மைச்சுட்டு (அருகில்) : இங்கு, இவன், இது

(3) உ - சேய்மைச்சுட்டுக்கும் அண்மைச்சுட்டுக்கும் இடையே உள்ள பொருளைக் குறிக்கும் : உங்கு, உவன்

*உ எனும் சுட்டு இன்றைய வழக்கில் பயன்படுத்துவதில்லை.

Kalviulagu
TAMIIL EDUCATION WEB

# வினா எழுத்து

- வினா எழுத்துகள் 5. அவை எ, ஏ, யா, ஆ, ஓ

- இவை சொல்லின் முதலில் அல்லது இறுதியில் வரும்.

(1) எ, யா - சொல்லின் முதல் எழுத்தாக வரும்
எ.கா : எது? யாது?

(2) ஆ, ஓ - சொல்லின் இறுதி எழுத்தாக வரும்
எ.கா : அவனா? ( அவன் + ஆ )
அதுவோ? ( அது + ஓ )

(3) ஏ - சொல்லின் முதலிலும் இறுதியிலும் வரும்
எ.கா : ஏன்?
நல்லதுதானே? ( நல்லது + தான் + ஏ )

Kalviulagu
TAMIIL EDUCATION WEB

# திணை

- திணை இரு வகைப்படும். அவை உயர்திணை, அஃறிணை ஆகும்.

அ) உயர்திணை - மனிதர்களையும் தேவர்களையும் நரகரையும் குறிப்பது.

எ.கா: அப்பா, முருகன், கலையரசி, மருத்துவர்

ஆ) அஃறிணை - விலங்குகளையும் தாவரங்களையும் உயிரில்லாப் பொருள்களையும் குறிப்பது.

எ.கா: கரடி, செடி, புத்தகம், காலணி

Kalviulagu
TAMIIL EDUCATION WEB

# பால்

Kalviulagu
TAMIL EDUCATION WEB

- பால் என்பது பகுப்பு எனக் கூறப்படும்.
- பொருள்களை (உயர்திணை, அஃறிணை) ஐவகைப் பால்களாகப் பிரிக்கலாம். அவை:-

அ) ஆண்பால் - முருகன், சிறுவன், அரசன்

ஆ) பெண்பால் - மாணவி, பொற்செல்வி, அரசி

இ) பலர்பால் - மாணவர்கள், இளையோர்

ஈ) ஒன்றன்பால் - மரம், புலி, மயில்

உ) பலவின்பால் - மரங்கள், புலிகள், மயில்கள்

# எண்

- பொருள்களின் எண்ணிக்கையை உணர்த்துவது எண் ஆகும்.
- எண் இரண்டு வகைப்படும். அவை ஒருமை, பன்மை எனப்படும்.
- ஒரு பொருளை மட்டும் குறிப்பது ஒருமை; ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைக் குறிப்பது பன்மை.

| எ.கா: | ஒருமை | பன்மை |
| --- | --- | --- |
| | நாற்காலி | நாற்காலிகள் |
| | காலணி | காலணிகள் |
| | புத்தகம் | புத்தகங்கள் |
| | கட்டடம் | கட்டடங்கள் |

Kalviulagu
TAMIIL EDUCATION WEB

# காலம்

## அ- இறந்த காலம்

ஒரு செயல் அல்லது தொழில் நடந்து முடிந்து விட்டதைக் காட்டுவது இறந்த காலம்.

எ.கா. பாடினான், நடந்தன, கேட்டார், ஆடின, சென்றார்

## ஆ- நிகழ் காலம்

ஒரு செயல் அல்லது தொழில் நடைபெற்றுக் கொண்டிருப்பதைக் காட்டுவது எதிர்காலம்.

எ. கா. பாடுகிறார், நடக்கின்றன, கேட்கிறார், ஆடுகின்றன, செல்கிறார்

## இ- எதிர் காலம்

ஒரு செயல் தொழில் நடைபெறவிருப்பதைக் காட்டுவது எதிர்காலம்.

எ. கா. பாடுவான், நடக்கும், கேட்பார், செல்வார்.

Kalviulagu
TAMIL EDUCATION WEB

# ஒரு / ஓர்

**ஒரு** - உயிர்மெய்யெழுத்தை முதலாகக் கொண்டு தொடங்கும் சொல்லின் முன் வரும்.

**எ.கா** : ஒரு <u>க</u>தவு
ஒரு <u>மா</u>லை

**ஓர்** - உயிர் எழுத்தை முதலாகக் கொண்டு தொடங்கும் சொல்லின் முன் வரும்.

**எ.கா** : ஓர் <u>அ</u>ணில்
ஓர் <u>ஓ</u>லை

Kalviulagu
TAMIIL EDUCATION WEB

# அது / அஃது

**அது** - உயிர்மெய்யெழுத்தைக் கொண்டு தொடங்கும் சொல்லின் முன் வரும்.

**எ.கா** : அது <u>பெ</u>ட்டி
அது <u>ம</u>ரம்

**அஃது** - உயிர் எழுத்தைக் கொண்டு தொடங்கும் சொல்லின் முன் வரும்.

**எ.கா** : அஃது <u>அ</u>ணில்
அஃது <u>இ</u>லை

Kalviulagu
TAMIIL EDUCATION WEB

# தன் / தம்

Kalviulagu
TAMIL EDUCATION WEB

தன் - உயர்திணை ஒருமையையும் அஃறிணை ஒருமையையும் குறிக்கும்.

எ.கா : முகிலன் தன் பென்சிலை எடுத்தான்.
சிங்கம் தன் குட்டிக்குப் பாலூட்டியது.

தம் - உயர்திணை மரியாதை ஒருமையையும் உயர்திணை பன்மையையும் அஃறிணை பன்மையையும் குறிக்கும்

எ.கா : ஆசிரியர் தம் புத்தகத்தைத் தேடினார்.
இரவியும் கவியும் தம் பென்சில்களைத் தேடினர்.
யானைகள் தம் குட்டிகளைப் பாதுகாத்தன.

# பெயர்ச்சொல்

**பொருட்பெயர்** - ஒரு பொருளின் பெயரைக் குறிப்பது.

எ.கா: மாமா, பூபாலன், பூனை, ஆசிரியர், பட்டம்

**இடப்பெயர்** - ஓர் இடத்தின் பெயரைக் குறிப்பது

எ.கா: திடல், பள்ளி, மலேசியா, சுங்கை சிப்புட்

**காலப்பெயர்** - காலத்தைக் குறிப்பது

எ.கா: காலை, நள்ளிரவு, நேற்று, பங்குனி, வியாழன், கோடை

**சினைப்பெயர்** - ஒரு பொருளின் பகுதிகளை@உறுப்புகளைக் குறிப்பது.

எ.கா: கிளை,பழம், இலை, தலை, வால்

**பண்புப்பெயர்** - ஒரு குணத்தை அல்லது பண்பைக் குறிக்கும்.

எ.கா: அன்பு, கருமை, உயரம், பசுமை

**தொழிற்பெயர்** - ஒரு தொழிலைக் குறிப்பது

எ.கா: பாடுதல், கற்பித்தல், படிப்பு, ஏற்றுமதி

Kalviulagu
TAMIL EDUCATION WEB

# வினைமுற்று

- ஒரு வினையின் கருத்து முழுமையாக முடிந்திருக்கும்போது வினைமுற்று எனப்படும்.
- வினைமுற்று காலம், திணை, எண், இடம், பால் ஆகியவற்றைத் தெளிவாகக் காட்டும்; குறிப்பாலும் உணர்த்தும்.

எ.கா: பூரணி பட்டம் <u>பெற்றாள்.</u>

மாடு புல் <u>மேய்ந்தது</u>.

Kalviulagu
TAMIL EDUCATION WEB

# எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்

**எழுவாய்** - ஒரு செயல் நிகழ்வதற்குக் காரணமாய் இருப்பது எழுவாய்.

- பயனிலையின் முன் யார், எது, எவை, யாவை முதலிய வினாக்களை எழுப்பும்போது கிடைக்கும் விடையே வாக்கியத்தின் எழுவாய் ஆகும்.
- பெயர்ச்சொற்கள், தொகைகள் முதலியவை வாக்கியத்தில் எழுவாயாக அமையும்.
- எழுவாய் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் உணர்த்தப்படும்.

**பயனிலை** - எழுவாயின் செயலைக் காட்டும் சொல் பயனிலை ஆகும்.

- வினைமுற்றுகள், பெயர்ச்சொற்கள், வினைப்பெயர் ஆகியவை பயனிலையாக வரும்.
- எல்லா வாக்கியங்களிலும் பயனிலை இருக்கும்.

**செயப்படுபொருள்** - யாரை, எதை, எவற்றை முதலிய வினாக்களை எழுப்பும் போது கிடைக்கும் விடையே வாக்கியத்தின் செயப்படுபொருள் ஆகும்.

- எல்லா வாக்கியங்களிலும் செயப்படுபொருள் இருக்காது.

எ.கா: 1. அருண் வீட்டை அடைந்தார்.

(எழுவாய்) (செயப்படுபொருள்) (பயனிலை)

Kalviulagu
TAMIL EDUCATION WEB

# வாக்கிய வகைகள்

1) செய்தி வாக்கியம் - தகவலை வெளிப்படுத்துதல்

எ.கா : நேற்று மழை பெய்தது.

2) வினா வாக்கியம் - தகவலைப் பெறுதல்

எ.கா : இது யாருடைய வீடு?

3) விழைவு வாக்கியம் - வேண்டுகோள், கட்டளை, வாழ்த்துதல், சபித்தல்

எ.கா : இங்கே வா (கட்டளை)

எனக்கு இந்நூலைத் தருக (வேண்டுகோள்)

ஒழிந்து போ! (சபித்தல்)

பல்லாண்டு வாழ்க! (வாழ்த்துதல்)

4) உணர்ச்சி வாக்கியம் - உள்ளத்து உணர்ச்சியைக் காட்டுதல்

எ.கா : ஆஹா! அழகே!

ஐயோ! வலிக்கிறதே!

Kalviulagu
TAMIL EDUCATION WEB

# தனி வாக்கியம்

- ஓர் எழுவாய் அல்லது பல எழுவாய்கள் ஒரே பயனிலையைப் பெற்று வருவது தனி வாக்கியமாகும்.

எ.கா: புத்தர் அன்பைப் போதித்தார்.
(எழுவாய்) (பயனிலை)

கவினும் முகிலனும் தங்கம் வென்றனர்.
(எழுவாய்) (எழுவாய்) (பயனிலை)

Kalviulagu
TAMIL EDUCATION WEB

# முற்றுப்புள்ளி ( . )

வாக்கிய முடிவில் முற்றுப்புள்ளி இடவேண்டும்.

வாக்கியத்தில் பொருள் முடிந்திருப்பதைக் காட்டுவது முற்றுப்புள்ளி.

எ.கா: அறிவியல் அறிஞர்கள் பல அறிய கண்டுபிடிப்புகளை உருவாக்கி உள்ளனர்.

சொற்சுருக்கங்களில் முற்றுப்புள்ளி இடவேண்டும்.

எ.கா: 1. பெ.ஆ.ச. (பெற்றோர் ஆசிரியர் சங்கம்)

2. திரு. (திருவாளர்)

Kalviulagu
TAMIIL EDUCATION WEB

# உணர்ச்சிக்குறி ( ! )

நகை, அழுகை, அச்சம், பெருமகிழ்ச்சி, கோபம், பெருமிதம் போன்ற தன்மைகளை வெளிப்படுத்தும் சொற்களுக்குப் பின் உணர்ச்சிக்குறி இடவேண்டும்.

உணர்ச்சிக்குறிகள் வாக்கிய இறுதியில் அமையலாம்.

எ.கா: 1. ஐயோ! பாவம்! இவன் நல்லவனாயிற்றே!

2. உன்னால் முடியும் தம்பி!

Kalviulagu
TAMIL EDUCATION WEB

# வினாக்குறி ( ? )

ஒரு வாக்கியம் வினா வாக்கியமாக அமையின் அதற்கு வினாக்குறி இடவேண்டும்.

எ.கா: 1. இந்த வேலையைச் செய்தது யார்?

2. ஏன் நீ செல்லவில்லை?

Kalviulagu
TAMIIL EDUCATION WEB

# காற்புள்ளி ( , )

சொற்களைத் தனித்தனியாகவோ, அடுக்கடுக்காகவோ பிரிக்கும்போது காற்புள்ளி இடவேண்டும்.

எ.கா: அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பாலைக் கொண்டது திருக்குறள்.

ஆகவே, எனவே, ஆனால், ஏனென்றால் முதலிய இணைப்புச் சொற்களுக்குப்பின் காற்புள்ளி இடவேண்டும்.

எ.கா: முகிலன் கடுமையாக உழைத்தான். எனவே, வாழ்க்கையில் முன்னேறினான்.

விளிச்சொற்களுக்குப் பின் காற்புள்ளி இடவேண்டும்.

எ.கா: கந்தா, இங்கே வா.

முகவரிகளை எழுதும்போது காற்புள்ளி இடவேண்டும்.

எ.கா : மு.தமிழன்பன்,
37, ஜாலான் அக்கார்,
தாமான் அமான்,
42700 பந்திங்,
சிலாங்கூர்.

Kalviulagu
TAMIIL EDUCATION WEB

# காற்புள்ளி ( , )

கலவை வாக்கியங்களில் கருத்துகளைப் பிரித்துக்காட்டுவதற்குக் காற்புள்ளி இடவேண்டும்.

எ.கா: நாடகம் சிறப்பாக அமைய வேண்டுமானால், ஆழமான கருத்துகள், சிந்தனையைத் தூண்டும் காட்சிகள் இடம்பெற வேண்டும்.

நேர்க்கூற்றின் இறுதியில் காற்புள்ளி இடவேண்டும்.

எ.கா : "நான் நூல் நிலையத்திற்கு வருகிறேன்," என்று குமணன் கூறினான்.

Kalviulagu
TAMIL EDUCATION WEB

# சந்தச்சொற்கள்

- கவிதையில் ஒரே ஓசையில் முடிகின்ற சொற்கள் சந்தச் சொற்களாகும்.
- சந்தச்சொற்கள் கவிதைக்கு இனிய ஓசை நயத்தைத் தருகின்றன.

எ.கா : உழைப்பில் கிடைப்பது <u>பணம்</u>
உறவினை வளர்ப்பது <u>குணம்</u>
இழிவினை அளிப்பது <u>சினம்</u>
அன்றாடம் என்பது <u>தினம்</u>

( பணம் - குணம் - சினம் - தினம் ஆகியவை சந்தச் சொற்கள் )

Kalviulagu
TAMIL EDUCATION WEB

# மோனை

- மோனை என்றால் முதல் எழுத்து ஒன்றித்து வருதல் என்று பொருள்படும்.
- கவிதையில் அடிதோறும் முதல் எழுத்து ஒரே இனமாக இருப்பின் **அடிமோனை** எனப்படும்.

**எ.கா** : பழனி மலைக்குச் சென்று வந்தேன்
பஞ்சா மிருதம் கொண்டு வந்தேன்

- கவிதையில் ஓர் அடியில் ஒவ்வொரு சீரிலும் முதல் எழுத்து ஒன்றித்து வந்தால் **சீர்மோனை** எனப்படும்.

எ.கா : **க**ற்க **க**சடற **க**ற்பவை **க**ற்றபின்
நிற்க அதற்குத் தக

Kalviulagu
TAMIL EDUCATION WEB

# எதுகை

- கவிதையில் அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒரே இனமாக ஒன்றி வருவது எதுகையாகும்.

எ.கா :

மூ<u>ங்</u>கில் வெட்டி வாழ்ந்திடுவார்
முனைந்து மூங்கில் வெட்டிடுவார் !
ஆ<u>ங்</u>கு அவற்றைக் கட்டுக்கட்டி
ஆலை நோக்கிச் செலுத்திடுவார் !

Kalviulagu
TAMIL EDUCATION WEB